224701

R65
N29
224701

சாதனாநுபவ சாரம்.

அப்பர்சாமி ஐயர்

1929.

R65
N29

R65
N29.
224701

322

உ

ஸ்ரீ சற்குருவே நம:

# சாதனானுபவ சாரம்.

## (முத்திநெறி சுருக்கத்துடன்)

10 JAN 19..
MADRA

இது

திருவண்ணாமலை

ரா. சீநிவாச முதலியார்

குமாரர்

**அப்பர்சாமி முதலியாரால்**

திருவண்ணாமலை

நாகராஜா அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

...right Registered.

*1929.*

---

...பதிவு செய்யப்பட்டது.

[அணா 0—1—0

R65
N29.
224701.

உ

OFFICE … MADRAS
10 JAN 193

ஸ்ரீ சற்குரவே நம:

# சாதனானுபவ சாரம்.

## (முத்திநெறி சுருக்கத்துடன்)

இது
திருவண்ணாமலை
ரா. சீநிவாச முதலியார்
குமாரர்
அப்பர்சாமி முதலியாரால்

திருவண்ணாமலை
நாகராஜா அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

Copy-right Registered.

1929.

---

நூல் உரிமை பதிவு செய்யப்பட்டது.

இதன் விலை] [அணா 0—1—0

திருவண்ணாமலை.

## வா. அண்ணாமலை பிள்ளை இயற்றிய வெண்பா.

சீரோங்கி யேரருணை ஸ்ரீரமண பக்தனுமாம்
பேரோங்குஞ் சீனுவா சப்பேரோன்—நேரோங்கும்
ஸ்ரீசாத னுபவஞ் செப்பியசா ராம்ஸமிதே
ஏசாதோர் மோக்க நெறிக் கேண்.

352
181'48

## முகவுரை.

ஆன்ம வித்தையைப் போதிக்கக் கூடிய வேதாந்த கிரந்தங்கள் பெரும்பாலும் வடபாஷையிலும் வடமொழிக் கலப்புள்ள தமிழ்மொழி பெயர்ப்பிலும் உள்ளதோடு அவை விரிவாகவும் தக்கார்பால் பல சாத்திரங்களை நெடுநாள் பாடங் கேட்டாலொழிய சுலபமாய் எதார்த்தம் விளங்கக்கூடாத நிலைமையிலும் அமைந்திருத்தலால் சமுசாரப் பெரும் பாரத்தை நிவிருத்திக்கும் பிராப்த மில்லாத வென்போன்ற மந்தாதிகாரிகளுக்கு உதவும்படி இலக்ஷண கிரந்தங்களின் சாரங்களைச் சுருக்கித் தரும்படி கேட்டுக்கொண்ட எனது வேண்டுகோளுக்கிணங்கி எனது தமையனாரும் ஸ்ரீ கணபதியானந்த சுவாமிகள் மாணவரும் பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷிகள் பக்தருமான அருணை ஸ்ரீ ரா. சீனிவாச முதலியார் அவர்கள் இந்நூலைக் கூடிய வரையில் சுருக்கமாக வரைந்து கொடுத்ததற்கும், என்னொருவனேயன்றி யேனையோருக்கும் உதவவேண்டி அடியார் குமாரர் இதை அச்சியற்றிப் பிரசுரப் படுத்தியதற்கும் உள்ளவரையில் நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளேன்.

1224701

20-9-29
அருணை.

இங்ஙனம்,
அ[illegible]ர்க்கடியேன்
[illegible]காம்பர முதலியார்.

ஓம்
தத் சத்.
ஸ்ரீ கணபதியானந்த சற்குரவே நம:

# சாதனானுபவ சாரம்.

## தெய்வ வணக்கம்.

ஓதலாதி யொழுக்கத்தி னாலுறுஞ்
சாத னாநு பவசாரந் தான்சொல
வாத னாதி யனந்த தனிச்சிவம்
போத மாமப் பொருடுணை யாகுமே.

## சற்குரு வணக்கம்.

கணபதி யெனும்பேர் கேட்டுக் கமலச்சே வடிசேர்ந் தார்க்குக்
கணபதி மூர்த்தி யன்னக் களைதரும் மலங்கள் யாவுங்
§ கணபதி நீயே யென்னக் காண்பித்தான் யாவனந்தக்
கணபதி யானந் தக்கோன் கழலிணை வணங்கி வாழ்வாம்.

## பெரியார்வணக்கம்.

எந்த ரமணன் றாட்குறுகி னெல்லாத் தாப மும்மறுமோ
வெந்த ரமணன் றாட்கருதி னெல்லா நினைவு மொழிந்திடுமோ
வெந்த ரமணன் றாளறிவா யிலங்கி யுயிர்க்கின் பளித்திடுமோ
அந்த ரமணன் றிருத்தாளை யணிவா முள்ளத் தகங்கெடவே.

## நூவன்றகாரணம்.

மின்னலை யொக்கு மிந்த மேதினி வாழ்வென் றோர்ந்துந்
தன்னிலை யறிய மாட்டாத் தன்மையோர் தங்கட் கெல்லா
மன்னரும் வேதாந் தத்தின் மாண்பினை யுணர்த்த வேண்டிப்
பன்னுஞ்ச் சாத னாநு பவசாரஞ் சாற்றி னேனால்.

## அவையடக்கம்.

உவர்க்கடலை நீந்த வுனுஞ்சிட்டுக் கொப்பாந்
தவப்பயனென் சாற்றுந் தகை.

§ கணபதி-ப்ரஹ்மம்.

## நூல்.

சத்திய ஞான வனந்தானந்த விலக்கணமுடைய பரசிவ சொரூபத்தில் அனாதியாய் விளங்கிவரும் சீவ, ஈஸ்வர, சகம் என்னும் முப்பொருள்களுள் 1. சர்வக்ஞத்வமாதிய வெண்குணங்களுடையவனும் 2. சொரூப ஆவரணமின்றியவனும் ஈச்வரனெனவும்; 3. அற்பக்ஞத்வமாதிய வெண்குணங்களுடையவனும் சொரூப ஆவரணமுடையவனும் சீவனெனவும்; ஈச்வரனால் சிருட்டிக்கப்பட்டதும் நாமரூபங்களையுடையதும் சகமெனவும் சொல்லப்படுகின்றது. இம்முப்பதார்த்தங்கட்கும் 4. சத்தாஸ் பூர்த்தி கொடுக்கின்ற சுத்தப் பிரஹ்மமானது அகண்ட பரிபூர்ணமாய் 5. சசாதீய விசாதீய சுவகத பேதாஹிதமாய் நித்தியமுக்த மாதியவிலக்கணங்களோடுஇருந்தபடியே யிருக்கும். முற்கூறிய மூன்று பொருள்களுள் ஈச்வரன் சதா முத்தனாகையால் அவனுக்கு மோட்சப்பிராப்திக்குரிய முயற்சிகளில்லை. சகம் தமப்பிரதான 6. பிரகிருதியின் காரியமாகலானும் சடப்பொருளாகலானும் அந்தக்கரணமற்றதாகையானும் அதற்கு மோக்ஷமடையவேண்டுமென்ற ஞானமேயில்லை சுபாவத்தில் முக்தனாயினும் ஆவரணதோட சகிதத்தால் பந்தமுற்றவனான சீவனுக்கு மாத்திரம் மோக்ஷத்தில் இச்சையும் முயற்சியும் உண்டு. சீவர்களில் ஓரறிவுமுதல் ஐயறிவீறாகவுடைய வுயிர்கள் நீங்கலாக, அந்த ஐயறிவுக

1. சருவசக்தித்வம், சருவஞ்ஞத்வம், வியாபகத்வம், ஏகத்வம் சுதந்தரத்வம், சாமார்த்தியம், பரோக்ஷத்வம், மாயாவுபாதியுடைமை ஆகிய இவ்வெட்டும் ஈசுவரதர்மங்களாம்.
2. ஆவரணம்— மறைப்பு (இதுசத்துவ இராசத குணங்களாலமிழ்த்தப்படாத தாமதகுணமாம்)
3. அற்ப சக்தித்வம், அற்பஞ்ஞத்வம், பரிச்சின்னத்வம், நானாத்வம், பரதந்திரத்வம், சாமார்த்தியமின்மை, அபரோக்ஷத்வம் அவித்தையுபாதியுடைமை ஆகிய இவ்வெட்டும் சீவதர்மங்களாம்.
4. சத்தாஸ்பூர்த்தி—எல்லாவற்றிற்கும் இருப்புத்தன்மை கொடுத்து நிறைந்திருத்தல்.
5. சசாதி—சமானஜாதி, விசாதி—வேற்றுமைஜாதி, சுவகதம்—தனது அங்கங்கள்.
6. ப்ரக்ருதி— (ப்ர-மாயை; க்ரு-அவித்தை; தி-தமப்ரதானசக்தி ஆகிய) இம்மூக்குணங்களையுடையது.



ளோடு பகுத்தறிவையுமுடைய 7. மிசிரகர்மங்களின் பயனானமானிடசரீரிகட்கே மோக்ஷாபேக்ஷையுண்டு. இத்தகையினரையே ஆன்ம விசாரத்திற்குரிய முமுட்சுக்களென்று பெரியோர்கூறுகின்றனர். 8. விவேகமாதிய நான்கு சம்பத்துக்களுடைமை. 9, அந்தக்கரணத்தில் ஆவரணதோட மாத்திரமுடைமை. மோக்ஷத்தில் அதிதீவிர இச்சையுடைமை ஆகியஇவைகளே முமுட்சுகளுக்குரிய இலக்கணங்களாம்.

சற்குருவநுக்கிரகத்தால் முமுட்சுக்கள் சர்வதுக்க நிவிருத்தியையும் பரமாநந்தப் பிராப்தியையும் பெறுகின்றனர் இதுவே மோக்ஷமெனப்படும்.

எந்த விசாரணையால் பந்தநிவிருத்தியும் முத்திப் பிராப்தியுங் கூடுமோ, எந்த வுபாயங்களால் சற்குருவானவர் சீடனை 10. நற்கதி பெறச் செய்கின்றாரோ அந்தவிவரங்களைக் குருசிஷ்ய 11. சம்வாத முகத்தால் மேல் விளக்குகின்றோம்.

சீடன்:—கருணையங்கடலே! அடியேனுக்குத் தாயுந் தந்தையுங் குருவுந் தெய்வமுமாய் விளங்கும் ஐயனே! ஏழையேன் தேவரீரது திருவடியில் அடைக்கலம் அடைக்கலம். தொன்று தொட்டுத் தொடர்ந்து இவ்வெளியேனை மிகுதியும் வாட்டிவருகின்ற 12. தாபத்திரய தீக்ஷண்ணியத்தைப் பொறுக்க முடியாமல் தமது திருவடியில் சரணாகதியடைந்தவினையேற்குப் பவமென்னுந் துக்கசாகரத்தினின்றும் விடுபட்டுச் சிவமென்னும் சுகசாகரத்திற் படிந்து உய்தற்கான வுபாயங்களை மிகத் தெளிவுடனருளிச்செய்து ஆட்கொள்ளப் பிரார்த்திக்கின்றேன்.

7. மிசிரகன்மம்—பாவபுண்ணிய கருமங்களின் கலப்பு.
8. விவேகமாதிய நான்கு சம்பத்துகள்.—விவேகம், விராகம், சட்சம்பத்தி, முமூட்சுத்துவம்.
9. அந்தக்கரணதோடம்—மலம், விட்சேபம், ஆவரணம் என மூன்றும்.
10. நற்கதி—இனிப்பிறவாமை.
11. சம்வாதம்—வினவிடை.
12. தாபத்திரயம்—அத்தியாத்மதாபம், அதிபூததாபம், அதிதெய்வதாபம்.

குரு:—13 (தீவிரதா பக்குவத்திற்கு அகமகிழ்ந்தவராய் கிருபாநோக்குடன் சீடனை அன்போடும் அருகழைத்து அவன் உள்ளம் சாந்தியடையுமாறு) அஞ்சேல்! அஞ்சேல்! என்று அபயந்தந்து முறைப்படி 14. தீக்ஷைகள் மூன்றும் செய்து மைந்தனே! நீ உன் எதார்த்தத்தினை மறந்ததால்இது காறும் இத்தாபத்திரய வக்கினியால் சூழப்பெற்று மிகவும் வருந்தியிளைத்தனை. நீ இத்துன்பங்களால் அலமந்ததற்குக் காரணம் பிறிதொன்றுமில்லை.

எதை மறந்ததால் இவ்வனர்த்தங்கள் விளைந்தனவோ அந்தவுன்னெதார்த்த சொரூபத்தை யுள்ளவாறறிவதே இத்துக்க சாகரத்தினின்றும் விடுபடுவதற்கான தக்கவுபாய மென்றுணர்க.

சீடன்:—சுவாமி! தேகேந்திரியாதிகளைத் தவிர்த்து என்னெதார்த்த சொரூபம் அல்லது 'நான்' என்பதற்குப் பொருள் வேறாக விருந்தால் கருணைகூர்ந்து அதனை யுரைத்தருள வேண்டுகிறேன்.

குரு:—தேகேந்திரியாதிகள் 15. சடபதார்த்த மாகலானும் சித்வடிவனான உனது சம்பந்தத்தினாலேயே அவை பிரகாசிக்கின்றனவாகலானும், உண்மையுணர்ந்தபோது மறைபடக்கூடிய தோற்றமாத்திரப் பொருளாக விருத்தலானும் அவையாவும் 'நான்' என்பதற்குப் பொருளாகமாட்டா வென்று ஒவ்வொன்றையும் பற்றி விளக்கமாகக் கூறுகிறோம் கேட்பாயாக.

(1) தேகம்—இது 16. பஞ்சீகிருத 17. தூலபூத விகாரமாகலானும்; அன்னமயகோசமாகலானும்; பிறத்தல் இருத்தல், வளர்தல், பருத்தல், சிறுத்தல், மரித்தலாதிய தருமங்

13: தீவிரதாபக்குவம்—தாபத்திரயத்தை அற்பமும் சஹிக்க முடியாமை.

14. முத்தீக்ஷை—மானததீக்ஷை, நயனதீக்ஷை, ஸ்பரிசதீக்ஷை.

15. சடம்—அறிவின்மையது. 16. பஞ்சீகிருதம் (சூக்கும பூதங்களின் தமோகுணக்) கலப்புள்ளது. 17. தூலபூதம்-பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் எனவைந்தாம்.



களையுடைமையானும்; எனது தேகம் என்ற விடத்து இதர வஸ்துக்களைப் போலவே தேகமும் தனக்கு வேறானவஸ்துவென்று பொருளாகலானும் நான் என்பதற்குப் பொருள் தேகமன்றாம்.

2. இந்திரியங்கள்:—18. ஞான 19. கன்மேந்திரியங்கள் 20. அபஞ்சீகிருத சூக்கும பூதகாரியமாகலானும்; அந்தமந்தமாதிய தருமங்களை யுடைமையானும்; அறிபடுபொருளாகலானும்; வெவ்வேறு அறிவையுந் தொழிலையுமுடைமையானும்; ஓரவத்தையிலிருந்து மற்றோரவத்தையிலில்லாமலிருத்தலானும் 'நான்' என்பதற்குப் பொருள் இந்திரியங்களன்றாம்.

3. 21. பிராணாதி பஞ்ச வாயுக்கள்:—பிராணாதிவாயுக்கள் சூக்கும பூதாகாசதகுணகாரிய மாகலானும்; சலனதருமங்களுடைமையானும்; அறிவின்மையானும்; அறிபடுபொருளாகலானும் 'நான்' என்பதற்குப் பொருள் பிராணாதி வாயுக்களன்றாம்.

4. காணம்:—மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய இந்நான்குக்கும் அந்தக்கரண மென்று பெயராம். இது சூக்கும பூதசத்துவகுண காரியமாகலானும்; சஞ்சல, நிச்சய, சிந்தன, அகம்பாவமாகிய பேதவிருத்திகளை யுடைமையானும்; சுழுத்தியாதிகளில் அபாவமாகலானும்; அறிபடுபொருளாகலானும் 'நான்' என்பதற்குப் பொருள் காரணமன்றாம்.

5. அஞ்ஞானம்:—இது சதசத் 22. விலட்சண 23. அநிர்வசனீயமாகலானும் 24. சுவாசிரிய சுவவிஷயமாகலா

18. ஞானேந்திரியங்கள்-சுரோத்திரம், துவக்கு, சட்சு, சிங்குவை, கிராணம் என்பனவாம். 19. கன்மேந்திரியங்கள்—வாக்கு, பாணி,பாதம்,பாயு, உபத்தம் என்பனவாம். 20. அபஞ்சீகிருதம்—(சூக்குமபூதக்) கலப்பற்றது. 21. பஞ்சவாயுக்கள்—பிராணன், வியானன், அபானன், சமானன், உதானன்.

22. விலட்சணம்—வேறுபட்டது. 23 அநிர்வசநீயம்—வசனிக்கக்கூடாதது. 24. சுவாசிரிய சுவவிஷயம்—எதனை ஆஸ்ரயிக்கிறதோ அதனையே மறைத்தல்.

னும்; தத்துவங்களுக்கெல்லாம் மூலமாகலானும்; ஞானத்தால் 25. பாதிக்கப்படுதலானும்; அறியேனென்னு மனுபவத்தால் அறிபடுபொருளாகலானும் 'நான்' என்பதற்குப் பொருள் அஞ்ஞானமன்றாம். ஆகவே இவற்றை இவ்வாறுணர்ந்த 26. அறிவேதுவோ 27. சச்சிதானந்த சொரூபமாகிய அவ்வான்மாவே நான் என்பதற்குப் பொருளாம்.

சீடன்:—சுவாமி! தேகமுதல் அவித்தையீறாகவுடைய சகல தத்துவங்கட்கும் விலட்சணமாகவும் சாட்சியாகவுமுள்ள ஆன்மாவே எனது நிஜசொரூபமென்றுணர்ந்தேன். ஆனால் சடபதார்த்தங்களாகிய தேகேந்திரியகரணாதிகளை அபிமானிப்பவனும் அவைகளுக்கு அறிவைக் கொடுப்பவனும் இன்னனென்பதை விவரித்தருளப் பிரார்த்திக்கிறேன்.

குரு:—அபிமானிப்பவன் 28. சிதாபாசனெனப்படுகிறான். 29 வியட்டியஞ்ஞானம் அல்லது புத்தி, அதிற்றோன்றும் ஆபாசம், அதிட்டான சைதன்னியம் ஆகிய இம்மூன்றம்சங்களுடையவனே சிதாபாசனெனப்படுகிறான். அபிமானத்துவம் ஆபாச சகிதமனத்திலுள்ளதேயன்றி 30 ஆபாசபாகத்திலின்றாம். நிற்க, சகல சடபதார்த்தங்களுக்கும் அறிவைக்கொடுப்பவன் ஆன்மாவேயாம். எவ்வாறெனின், ஆன்மாவினின்று சிதாபாசனுக்கும் சிதாபாசனினின்று இந்திரியங்கட்கும், இந்திரியங்களினின்று விடயங்கட்கும் பிரகாசம் (அறிவு) கிடைக்கிறதாம், சிதாபாசனையே பிரமாதாவென்றும், சிதாபாசனினின்றும் இந்திரியத்துவாரா விடயங்கள்வரை நீண்ட விருத்திகளே பிரமாணமென்றும், விடயசமானாகாரத்தையுடைய விருத்தியே பிரமாவென்றும், விடயமே பிரமேயமென்றும், விடயவுபகித சேதனமே பிரமேய சேதனமென்றும் சொல்லப்படுகின்றனவாம். இங்ஙனம் சிதாபாச

---

25 பாதிக்கப்படல்-கெடல். 26 அறிவு-சேதனம்.

27 சத்து-முக்காலத்து முள்ளது. சித்து—எல்லாவற்றையும் பிரகாசிப்பிக்கும் சுயம் பிரகாசம். ஆனந்தம்-மிகுந்தபிரியம்.

28. சிதாபாசன்— சைதன்னியத்தின் இலட்சணங்களின்றிச் சைதன்னியம்போல் தோன்றுதல். 29. வியட்டி-தனிமை 30. ஆபா



சேதனமுதல் விடயமீறாகவுள்ள பதார்த்தங்களனைத்தையும் பிரகாசிப்பிக்கும் ஆன்மா தான்மாத்திரம் 31. நிர்விகாரியாகவே விளங்கிக் கொண்டிருக்கிறதாம். இவ்வான்மாவே 'தத்துவமசி' யென்ற மகாவாக்கியத்தின் இலட்சியப் பொருளாம்.

சீடன்:—'தத்துவமசி' யென்ற மகாவாக்கியத்தின் இலட்சியப்பொருளே ஆன்மாவென்பதை விளக்கமாக வுரைத்தருள வேண்டுகிறேன்.

குரு:—32. மகாவாக்கியம் நான்கனுள் 'தத்துவமசி' யென்பது உபதேச வாக்கியமாம். இவ்வாக்கியத்தின் சிரவண, மனன, நிதித்தியாசனங்களால் சொரூப சாட்சாத்காரம் சித்தித்தல் எங்ஙனமெனின்;—தத், துவம், அசியென்ற மூப்பதங்களாலான இம்மகா வாக்கியத்தின் 33. 'தத்' பதமானது வாச்சியார்த்தத்தினால் ஈசனையும், இலட்சியார்த்தத்தினால் ப்ரஹ்மத்தையும் 34. துவம்பதமானது வாச்சியார்த்தத்தினால் ஜீவனையும் இலட்சியார்த்தத்தினால் கூடஸ்தனையும்,

---

சபாகத்திலின்றாம் என்பது:—வெந்நீரிலுள்ள வுஷ்ணத்தன்மையானது நீருக்கேயன்றி அந்நீரிலுள்ள பிரதிபிம்பத்திற்கின்மை போன்றாம். 31. நிர்விகாரி—மாறுதலடையாதது.

32. மகாவாக்கியங்கள் நான்காவன-(1) தத்துவமசி. (2) அகம் ப்ரஹ்மாஸ்மி. (3) அயமான்மா ப்ரஹ்மம். (4) ப்ரக்ஞானம் ப்ரஹ்மம். ஆகியவாம். இவை முறையே உபதேசவாக்கியம், அனுபூதி வாக்கியம், சாட்சாத்கார வாக்கியம், இலக்ஷண வாக்கியம் எனப்படும்.

33. தத்பதவாச்சியார்த்தம்-மாயையோடு கூடிய ப்ரஹ்மவடிவ ஈச்வரன். தத்பத இலட்சியார்த்தம்-மாயையின்றிய சுத்தப்பிரம்மம்.

34. துவம்பத வாச்சியார்த்தம்-சிதாபாச சகித புத்தியோடு கூடிய கூடஸ்த சேதன வடிவ ஜீவன். துவம்பத லட்சியார்த்தம்—சிதாபாச சகித புத்தி வடிவ உபாதியின்றிய கேவல கூடஸ்த சைதன்னியம்.

35. அசிபதமானது மற்றிருபதங்களுடைய இலட்சியப்பொருள்களின் அபேதத்தையும் குறிப்பனவாம். இம்மகா வாக்கியோபதேசத்தால் சித்திக்கும் கூடஸ்த ப்ரஹ்மஅபேதநிலையே சொரூப சாட்சாத்காரமெனப்படும்.

சீடன்:—ஆண்டவனே! தம்முடைய கிருபாகடாக்ஷத்தினால் எனது சுபாவ நிலையினை உள்ளவாறுணர்ந்தேன். இவ்வனுபூதியினின்று சற்றும் நழுவாதிருத்தற் பொருட்டு இந்நிலை திடமாதற்குரிய வுபாயங்களையும் அருளிச்செய்ய வேண்டுகிறேன்.

குரு:—36. அனாத்மாகார விருத்திகட்குச்சிறிது மிடந்தாராது ஆன்மா (அகண்டா)கார விருத்தியிற் சந்ததமும் பழகி சகசமான திரநிலை பெற்று, அகப்புற திருட்டிகளற்றவனாய் 37. நிரதிசயாநந்தக் கடலிற்படிந்து நித்தியசுகசொரூபியாய் விளங்குவாய்.

சீடன்:—ஐயனே! தாம் கூறிய ஆன்மா (அகண்டா) கார விருத்திநிலை யென்பதை சற்று விவரிக்கப் பிரார்த்திக்கிறேன்.

குரு:—38. ஆபாச சகித கண்டாகாரத் தன்மையற்ற சுத்தமனத்தினது, ப்ரஹ்மத்தோடுள்ள வபேதஸ்திதியே அகண்டாகார நிலையெனப்படும்.

சீடன்:—எந்த சாதனங்களின் பயனாய் இவ்வகண்டாகாரநிலை சித்திக்கிறதென்பதைத் தெரிவிக்கவேண்டுகிறேன்.

---

35. அசிபதப் பொருள்-கடாகாயமும், மடாகாயமும் உபாதி நீங்கியகாலத்தில் ஏகமான மகாகாயமாவதுபோன்று ஜீவேச்வரவுபாதிநீங்கிய காலத்தில் விளங்கும் ஏகமான சுத்தப் பிரம்மம்.

36. அனாத்மாகாரவிருத்திகள் ஆன்மாவுக்கு அன்னியமாகத் தோன்றுகிற நாமரூபவெண்ணங்கள்.

37. நிரதிசயாநந்தம்—யாதொரு நிமித்தமுமின்றிய சொரூபாநந்தம்.

38. ஆபாசசகித விருத்தி—வாசனாவடிவமானபலவித சிந்தனைகள்.



குரு:—நிஷ்காமகர்மோபாசனைகளால் சித்த சுத்தியும், விவேக, வைராக்கியாதி சாதனங்களால் சிரவண மனனாதிகளுக்கு அதிகாரமும், மகாவாக்கிய சிரவண மனனாதிகளால் அபரோக்ஷஞானமும், 39. சிவோகமாதிய பாவங்களாலும் அகண்டாகார பாவத்தாலும் தத்பதார்த்தப் பரோட்சத்தன்மைப் பிராந்தி, துவம் பதார்த்தப் பரிச்சின்னத் தன்மைப்பிராந்தி ஆகியஇவ்விரண்டின்நிவிருத்தியும் சித்திக்கின்றனவாம். சகலசாதனங்களும் விருத்தி நாசத்தின்பொருட்டேயாம்.

சீடன்:—இவற்றில் பாவனாதீதம் வாய்த்தற்கான நேர் சாதனம் எது?

குரு:—40 அகண்டாகாரபாவமே.

சீடன்:—எப்போதும் அகத்திலுள்ளதுபோல் புறத்திலும் அபேத திருட்டி வாய்த்தற்கான வுபாயம்யாது?

குரு:—எப்போதும் எவ்விடத்தும் ஆன்மாவிற்கு அன்னியமாக அணுவுமில்லை. திருட்டிபேதத்தால் நாமரூபவடிவாக வுள்ள திருசியப் பிரபஞ்சங்கள் தோற்ற மாத்திரத்தில் அன்னியப்பொருள்களாய் விளங்குகின்றனவேயன்றி நாமரூப திருட்டியாகிய கற்பித நாட்டத்தை நீக்கி சச்சிதானந்த திருட்டியாகிய அதிட்டான நாட்டத்திற் பழகிவரின் தன்னையன்றி அணுவு மன்னியமில்லை யென்பதும், தான்கால தேசங்கட்கு அதீதனென்பதும் பிரத்தியட்சமாகும். இந்தசுவானுபவத்தின் சகஜஸ்திதியே 41. சொரூப சாட்சாத்காரமெனப்படும். இதுவே 42. ஜீவன் முத்தி நிலையுமாம்.

---

39. சிவோகமாதியபாவனைகள்:- சிவோகம்- அகம்சிவம். அகம் ப்ரஹ்மம்—ப்ரஹ்மம் அகம் என்பதாதியஓதப்ரோத பாவங்கள்.

40. அகண்டாகாரபாவம்:-காலதேச வஸ்துக்களால் கண்டிக்கப்படாத சர்வ வியாபகவடிவ பிரம்மத்தை நானென்று பாவனை செய்தலாம்.

41. சொரூபசாட்சாத்காரம்:-ஆத்மாகாரவிருத்தியின் சுபாவ ஸ்திதியாம்.

42. ஜீவன் முத்திநிலை:- தேகாதி பிரபஞ்சங்கள் தோற்றிக்கொண்டிருந்தும் தன்சுபாவ நிலையில் திரமுடைமை.

சீடன்:—சீவன் முத்தருடைய பேதமும், வ்யவகாரங்களும், அவர்களுக்குப் பிறப்பில்லை யென்பதற்கு ஆதாரமும் அருட்செய்யுமாறு பிரார்த்திக்கிறேன்.

குரு:—சீவன் முக்தர்களுடைய மோக்ஷ (பிறவா) நிலையில் சிறிதும் பேதமில்லை. ஆனால் இல்லறம், துறவறம் என்ற ஆசிரமபேதங்களும்; உழவு, வாணிபமாதிய விவகாரங்கள் அம்ச, பரமஹம்ச அதிவர்ணாச்சிரம சன்னியாசங்கள் ஆகிய பேதங்களும் மாத்திரம் உண்டு. ஞானிகள் எந்த ஆசிரமத்தை மேற்கொண்டிருந்தாலும் விவகார நிவிருத்தி பூரண விலட்சணத்தையும் விவகாரப் பிரவிருத்தி அதன் அளவுக்கேற்ற திருஷ்ட துக்கத்தையுங் கொடுக்குமென்க. இந்த துக்க சுகங்களால் எவ்விதத்திலும் அவர்களடைந்த ஞானத்திற்குப் பாதகமின்றென்பது துணிபு. ஞானிகளுடைய சஞ்சித, ஆகாம்மிய, பிராரத்த மென்னுங் கன்மத்திரயத்தில் ஞானத்தினால் சஞ்சிதமும், கர்த்ருத்வ போக்த்ருத்வ விழப்பால் ஆகாமியமும், புசிப்பதால் பிரார்த்தமும் நீங்கிவிடுவதால் அவர்களுக்குப் புனர்ஜென்மமின்றென்க. சமுத்திர தீரத்திலுள்ளவனுக்கும், சப்பலேறி, சிறிது தூரம் கடலில் சென்றவனுக்கும், நடு சமுத்திரத்தி லுள்ளவனுக்கும், சமுத்திரத்துள் ஆழ்ந்தவனுக்கும் எப்படி நிலத் தோற்றம் கொஞ்சம் கொஞ்சமாய்க் குறைந்துகொண்டும் அவ்வளவுக் கவ்வளவு ஜலத்தோற்றம் அதிகரித்துக்கொண்டும் வந்து முடிவில் ஜலத் தோற்றமும் அற்றுவிடுகிறதோ அப்படியே வித்து, வரன், வரியான், வரிட்டன் என்ற அனுபவ பேதமுடைய சீவன் முத்தர்களுக்கும் திருஷ்ட துக்கத்தின் அளவு முறையே பின் பின்னவர்களுக்கு முன் முன்னவர்களிலும் குறைந்தும் அங்ஙனமே ஆனந்தானுபவத்தில் பெருகியும் வந்து முடிவில் சுகானுபவமும் நீங்குமென்க.



சீடன்:—சுவாமி! விதேக முத்தி யென்பது யாது?

குரு:—பிராரத்த கன்மம் புசித்த பிறகு அஞ்ஞானம் சேதனத்தில் ஒடுங்குதல்.

சீடன்:—இத்தகைய ஜீவன்முத்தி விதேகமுத்தி நிலைகளைப் பெற்றுள்ள மகான்களுக்குள்ள சிறப்பையும் சிறிதுரைத்தருள வேண்டுகிறேன்.

குரு:—மகான்களின் பெருமைகள் அளவுக்கெட்டாதனவாம். என்றாலும் பின்வரும் திருப்பாக்களால் ஒருவாறு நீயே தெரிந்துகொள்வாய்.

பண்டை நான்மறை பகருதற் கரியவன் பாரத
வண்டநாடரு மனந்தகோ டிகளுமா ரமுதா
யுண்ட நாயகனுருவுசன் னுளத்துளே யடக்கிக்
கொண்ட ஞானிதன் பெருமையைக் கூறுவாரெவரே.

யாவ னிங்குமெய் யுணர்ந்தவ னவனேயே யிமையப்
பாவை தன்னையோர் பாகம் வைத் தவன்யா வவது
நாவின் மங்கையை யயர்தவ னவில்வது மவனைப்
பூவின் மங்கையைப் புணர்ந்தவன் புகழ்வது மவனே.

சீடன்;—தேவரீருடைய கிருபாகடாட்சத்தினால் சத்தியத்தை யுணர்ந்தேன். துன்பசாகரத்தினின்று கைதூக்கிப் போராநந்த வாரிதியிற் படியவைத்த தமது அரும்பெருங் கருணைக்குரிய கைம்மாறறியாது மயங்குகின்றேன்.

குரு:—சாட்சாத்கார நிலையினின்றும் சற்றும் நழுவாது எப்போதும் ப்ரஹ்மாகார சொரூபமாகவே விளங்குவையேல் அதுவே தக்க கைம்மாறாகும்.

ஸ்ரீ தண்டபதியாநந்தார்ப்பணம் சுபம்.

உ

ஓம்.

தத் சத்

ஸ்ரீ சற்குரு துணை.

# முத்திநெறிச் சுருக்கம்.

## மங்கலம்.

சுகனுங் கணபதியைச் சோதிரம ணத்தே
வகமுறவேத் தித்தொழுவோ மன்பால்—திகழுமுயர்
முத்திதவஞ் சொல்லிடற்கு முப்பொருளை முன்னவனை
சத்திசிவ னைமைந்தரோடுஞ் சாற்று.

## நூல்.

1. மான் மழுதண் மதிப்புனல்க ளணிந்த வள்ளல்
மானிடர்கண் டுயவருண்மா மறையிற் சீவன்
றன்பிரம மெனுமுயர்ந்த ஞான காண்டந்
தனிற்காணுஞ் சகஜீவ பரங்கண் மூன்றில்
தான்பெத்த மெனுமறிவிற் சகந்தனக்குஞ்
சதா முத்திப் பாற்குமின்று மோக்க விச்சை
தான்முத்த னயினுமா வரணத் தாலாஞ்
சலிப்பறநின் றிடவுன்னுஞ் சீவன் றானே.

2. தேடுமறி வுடைச்சீவ னஞ்சற் சீடன்
செப்புமுத்தோ டத்தில்விட்சே பமலந் தீர்த்துண்
ணடு விவே காதியசா தனங்க ணண்ணு
நன்மையினன் முத்தாப நலிவுக் கஞ்சி
விடுத்து வாழ்விக்கும் விமலற்றேடி
விரைந்தோடி யவன்றாளில் வீழ்ந்த நற்றி
வாடுமென் றுன் பொழியும்வகை வழுத்தியாள்வீர்
மாதவனே யெனக்குருவு மகிழ்ந்துநோக்கி.



3, சதகோடிப் பிறவிகளிற் செய்தன் மத்தாற்
சற்சுபவிச் சையையுடையாண் டகையே கேளாய்
எதனைமறத் தலினாலிவ் விடுக்கண் டோன்றி
எதனையறி யிற்கெடுஞ்சச் சித்தா நந்த
மதனைநின தியல்வடிவா யகத்தே றிற்பின்
னலக்கணுண்டோ சதானந்த னேநீ யிவ்வூ
னிதமுலகை நானெனதென் றகம்பா வித்த
நியாயத்தால் விளைந்தனவிவ் வல்லல் கண்டாய்.

4. என்னியல்பி னையும்யானென் றெண்ணி வந்த
யானற்ற தாம்பொருள்க டமையு மென்ற
னுன்னுமதிக் கனுபவத்திற் கொக்கு மாறே
யொவ்வொன்றி னிலக்கணத்தை யுரைத்தலோடும்
பன்னுமன்னி யங்களைநா னல்ல வென்றே
பற்றியல்பாய் நிற்குமொரு பரிசு மோதித்
தன்னியனுக் கிடுதல்பெருந் தரும மென்றுன்
சற்குருமுத் தீக்கைசெய்து சாற்றலானன்.

5. அன்னத்தால் வந்ததாலும் அந்தமுற்றழிவை யெய்தும்
பின்னெத்துவிளங்கலாலு மென்றேகமென்பதாலும்
துன்னுகாண்பொருளாய்த்தூலபூதத்திற்றோன்றலாலும்
மன்னுநா னென்பதற்கு மாண்பொருளுடலாகாதே.

6. அந்தமந்தா தியொடபஞ்சீ கிருத பூதகா ரியந் தானு
[வதாலும்
தந்தமறி வுகளிலுஞ்செய் தொழில்களிலும் வெவ்வே
[றுந் தன்மையாலும்
எந்தனிந்தி யங்களென்ப தாலுமறி படுபொருளா யிவை
[வதாலும்
மைந்தகன்ம ஞானவிந்தி யங்களு நா னென்பதற்குப்
[பொருளாகாவே.

அறிவின்மை யாலுமறி படும் பொருளா தலினாலு மசை
[தலாலும்
திரிவில்ருக் குமபூத ராஜதமா யெனதெனவே திகழ்
[தலாலும்

மறிசமயர் | தனில்மூனம்பார்க் களினும் சடப்பொ
[ருளாய்மதிக்கையாலும்
பிறிவுடைமைப் பிராணாதிகளும் பேசு காணெனற்குப்
[பொருளாகாவே

8. சஞ் சல நிச்சய சிந்த னவபிமா னம் மெனு நாற் றன்
[மையாலும்
பஞ்சரூக்குமபூத சத்துவமாய்சூழுத்தியினபாவத்தாலும்
உஞ்சலேயொத் தசைவதனு லறிபடுவத் துக்களுமா
[யொளிர்வதாலும்
தஞ்மென்ற சற்குணனே காணமது காணெனற்குப்
[பொருளாகாதே

9. சத்தசத்து களுக்குவிலட். சணமதாலும்
தன்னிலுண்டாகித்தனையே மறைத்த லாலும்
தத்துவங்கட்கெல்லாந்தான் வேறதாலும்
சன்மார்க்க ஞானமதாற் றவிர்தலாலும்
நித்தியனு மௌனியறியே னென்பதாலும்
நிதஞ்சுழுத்தி தனிற்றோன்ற லாலுமிவ்வ
வித்தையுகா னென்பதற்குப் பொருளன் றீங்கிவ்
விதமறிந்த வறிவாகுங் கரியே நீயாம்

10. தானல்லாச் சடமுதற்சாற் றவித்தை யீறும்
தத்துவத்தின் சாட்சியதே காணுகத்தேர்
தேனையா வானலு மவற்றை யானு
பெண்ணியபி மானிப்போன் யாவன் மற்றும்
தானறிய வவைகடமக் கறிவைத்தந்தும்
தாக்கற்று நிற்கின்ற. சமர்த்தன் யாவன்
வனறியு மாறிவற்றை கவிலல் வேண்டும்
கற்றனைத்தோர் காயகமே ஞானக் குன்றே

11. தனியிருளது புத்தி தற்சாயை யேயா பாசன்
பினியபுத்தியதே பந்த மேற்காது தனித்த சாயை
யனியவத் துகட்குப் போதமறிவியு மெவ்வா றென்னில்
துனியில்சீ வனிக் தி யங்கள் தோற்றமாம் விடயங்
[கட்கே.



12. முன் மூன்றும் பிரமாதாப்ர மாணப்ரமேய மென்பார்
பின்னமாம் பொருள்கட் கெல்லாம் பிறங்கொளியான்
[மாவிந்துக்
தன்னிலே யாறு விதே தத்துவ மசிக்க ருத்தம்
என்னவவ்வருத்தந் தன்னை யியம்புவாய் விரித்தென்
[றனே

13. தத்துவ மசியின் சொற்கள் தத்துவ மசியென் மூன்றும்
தத்துவங் கட்கு வாச்சியம் மீசன் சீவ னாகும்
தத்துவங் கட்கி லட்சியம் வத்து சாட்சி யாகும்
வத்துசாட்சியினபேதம்வழுத்தசிப்பொருளாங்காணே.

14. சுகந்தரு மொழிக ளான்கிற் றாயதத் தொமசியென்ப
தகமது வதுநீ யென்ன வறைவதாற் றீக்கை பூதி
யகம்பிர மமற்றி ரண்டு மதுதோன்ற லிலட்ச ணாவாம்
சகலவே தங்கள் சாரஞ் சாற்றுமீ தேயாங் காணே.

15. சுருதியின் பொருளைக்காணச் சுருக்கமாம் வழியா தென்
[னக்
கருத்தின்றோ டங்க ணீங்கக் கனவுபா சனைசத் கன்மஞ்
சிரவணமதன் பொருட்டாஞ் சிறந்தசாதனங்களான்கும்
பெறும்பொருட் டிரமமாறு பேச்சுன்னல் தெளித
[லாமே

16. பரிச்சின்ன மறவகை தியானம் பரோட்சநீங் கிட ஞானந்
[தாம்
திரிவிலா வநுபோகந்தான் திடப்படப்பாவம் வேண்டும்
மருவுபா வனைநிலைக்க மந்திரத் துதவி வேண்டும்
விரியுஞ்சா தனைகள் யாவும் விருத்தி நாசத்திற் கன்றே

17. சொற்படி யகம் பொருந்தத் தோன்றிடும் வெளிமு கத்
கற்பித நாம ரூபக் காட்சிதோன் றற்கே தென்னை [திற்
கற்பித நாட்ட மற்றுக் கண்டிட வருணைக் கத்தா
லற்பமும்மயலொன் றின்றியதிட்டான நிறையுங் காணே.

18. தன்னையே யன்றியொன்றைச் சற்றுமெப்போதுங்காணு
மின்னவர் பெருமை யாதோ வியம்பிடல் வேண்டு
[மென்னத்
தன்னையெப் பொருளின் பாலுந் தன்பாலெப்பொருளுங்
[காணு
மன்னவர் தமக்கு வேறு யமலன் மற் றின்றுந் தேரே

19. பத்தத்திற் கிடந்த வென்னைப் பண்புட னல் வே தத்தின்
அந்தத்தில் விளங்க வைத்த வமலநின் னுதவிக் கோர்மா
றெந்தத்திக் கிலுமே காணே னென்னவா சான் மகிழ்
[ந்து
தொந்தமற் றியல்பாய் மன்னல் தூயமா றுமென் றூரே.

வாழ்த்து.

வாழி ரமணனடி வாழி கணபதிதாள்
வாழிநீ டூழியிந் நூல் மண்.



உ

ஓம் தத்சத்குருவே நம:

# கிரமசிருட்டி சுருக்கம்.

1. ஸ்ரீ அனாதி சுத்தப்பிரஹ்மம், சிவம், செம்பொருளென்னும் பல நாமங்களால் கூறும் வஸ்துவில் வாஸ்தவாபேத கற்பித பேத, மூல (முக்குண) • சத்தியொன்றுண்டு.
2. அம்மூலசத்தியின் சத்துவ குணத்தில் தோன்றும் (வஸ்துசகித) வஸ்துவின்சாயை ஈஸ்வர சொரூபமாம்.
3. சத்துவகுண (ஈசுவரனிட)த்தின் முக்குணத்தில் விராட்டு இரணியகர்ப்பன், அவ்வியாகிருத னென்னு முப்பொருள் தோற்றமாம். ராஜதகுணத்தில் தோன்றும் வஸ்துவின்சாயை சீவர்களாம்.
4. அம்மூலசத்தியின் ராஜதகுண ( சீவர்களிட ) த்தின் முக்குணங்களினபிமானரே விஸ்வ தைசதபிராஞ்ஞராம்
5. அம்மூலசக்தியின் தமோகுணாம்சம் இரண்டாகி ஒன்று சீவர்களுக்கு தன் எதார்த்தம் தெரியவொட்டாது மறைக்கும் அதன் பெயர் ஆவரணமாம்.
6. அச்சக்தியின் மற்றோம்சத் (சேதனசகிதத்)தினின்றும் சூக்கும பஞ்சபூதங்கள் ( முக்குணத்தோடு ) தோன்றின அச்சக்தியின் பெயர் விட்சேபசக்தியாம்.
7. சூக்கும பஞ்சபூதங்களின் சத்துவாம்சத்தில் ஒவ்வொருமாத்திரை ஒன்றாய் சேர்த்தது அந்தக்கரணமாம்.
8. மேல்கண்ட சத்துவாம்சத்தில் தனித்தனி வைத்தது ஞானேந்திரியங்களாம்.
9. சூக்கும பஞ்சபூதங்களின் ராஜதாம்சத்தில் ஒவ்வொரு மாத்திரை ஒன்றாகச் சேர்த்தது பஞ்சவாயுக்களாம்
10. சூக்கும பூதங்களின்ராஜதாம்சம் தனித்தனிவைத்தது கர்மேந்திரியங்களாம்.

11. அந்தக்கரண பஞ்சகம், ஞானேந்திரிய பஞ்சகம், வாயு பஞ்சகம். கர்மேந்திரிய பஞ்சகம் சேர்ந்து இருபது தத்துவமான சூக்ம சரீரமாம்.

12. சூக்மபூத தாமதாம்சத்தை (ஈசுவரன்) சலக்க பஞ்சீகரணம் செய்ய தூலபூதமும் அதனின்றும் அண்டஜ சுவேதஜ உத்பிஜ சராயுஜ யோனிகளும்,தேவர்,மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, தாவரபேத சரீரங்களும் தோற்றமாம் தூலசரீரம் ஆறு தத்துவமாம்.

13. மூலசத்தியின் ரஜோகுணம் (அவித்தை) காரணசரீரமாம் தூலதேகம் 6. சூக்ம தேகம் 20. காரணதேகம் அதிற்றோன்றும் சீவன், தூலபூதம் 5. சத்துவ குணமாயை அதிற்றோன்றும் ஈசன் ஆகதத்துவம் 35. இவைகளுக்கு ஆதாரமாயும் அதிட்டானமாயுமுள்ள வஸ்துவே 36. வது தத்துவமாம்.

14. தூலதேகமே அன்னமயகோசமாம்.

15. கர்மேந்திரிய சகிதவாயுக்கள் பிராணமய கோசமாம்.

16. ஞானேந்திரிய சகிதமனம் மனோமயகோசமாம்.

17. ஞானேந்திரிய சகித புத்தி விஞ்ஞானமயகோசமாம்.

18. மூலாவித்தையே ஆனந்தமயகோசமாம்.

19. அன்னமயத்தில் பிராணமயமும் பிராணமயத்தில் மனோமயமும்மனோமயத்தில் விஞ்ஞானமயமும்விஞ்ஞானமயத்தில் ஆனந்தமயமும் ஒன்றுக்குளொன்று சூட்சுமமும் வியாபகமுமாம் இவைகளை பிரகாசிக்க செய்யும் ஆன்மா அதிசூக்ம சர்வவியாபக சுயம்பிரகாசமாம்.

20. ஆகாயம்:—உள்ளம், சுரோத்திரம், வியானன்,வாக்கு.
வாயு:— மனம், துவக்கு, பிராணன், பாணி.
தேயு:— புத்தி, சட்சு, அபானன், பாதம்..
அப்பு:— சித்தம், சிங்குவை, சமானன், உபத்தம்
பிருதிவி:-அகங்காரம், கிராணம், உதானன், பாயு,
காரியமான சூக்மசரீரம் காரணமான பூதகுணமுடையதாம்.

திருவருள்கூட்டிலுல் இதன்தொடர்ச்சி பின்வெளியாகலாம்.

.67/ட

## அருணாசல நிவாஸ ஸ்ரீ ஈச்வர ஸ்வாமிகள் அருளியவை.

| | | | |
|---|---|---|---|
| திருவண்ணாமலை க்ஷேத்ரபடம் (பஞ்சமூர்த்திகள் கிரிவலக்காட்சியுடன் (23 x 18) | 0 | 1 | 0 |
| ஸ்ரீ மஹர்ஷி ரமண சரித வசனம் (உபதேச மொழிகள் (நானார்?), உபதேச வுந்தியார், ஆன்ம வித்தை அடங்கியது). | 0 | 5 | 0 |
| ஸ்ரீ அருணாசல மாகாத்மிய வசனம் (தத்வார்த்தம், க்ஷேத்ரபடம், இத்தலத்திலுள்ள மகான்களின் சித்ரபடங்களும் அடங்கியது). | 0 | 12 | 0 |
| ஷை மாகாத்மியம், சரிதம், விவேகசூடாமணி, உள்ளது நாற்பது. ஸ்துதி பஞ்சகம் ஒரே பைண்ட் (காலிகோ) | 2 | 0 | 0 |

## ஸ்ரீ ரமண மஹர்ஷிகள் அருளிச்செய்தவை.

| | | | |
|---|---|---|---|
| ரமணகீதை மூலம். (நாகரலிபி) | 0 | 4 | 0 |
| ஷை (தமிழ் உரையுடன் ஸாதா பைண்ட் | 0 | 12 | 0 |
| ஷை ஷை காலிகோ பைண்ட். | 1 | 0 | 0 |
| ஷை தெலுங்கு லிபி (உரையுடன்). | 0 | 12 | 0 |
| அருணாசல ஸ்துதி பஞ்சகம் (அக்ஷரமணமாலை, பஞ்சரத்னம், பதிகம், அஷ்டகம், பஞ்சகம் அடங்கியது). | 0 | 2 | 0 |
| தேவிகாலோத்ரம் (ஞானசாரவிசார படலம்). | 0 | 2 | 0 |
| ஷை தெலுங்கு | 0 | 1 | 0 |
| உள்ளது நாற்பது (அநுபந்தத்துடன்). | 0 | 1 | 0 |
| உபதேசாரம் (ஸம்ஸ்க்ருத மூலம் உரையுடன்). | 0 | 1 | 0 |
| ஷை (தமிழ் உரையுடன்) | 0 | 1 | 0 |
| ஷை (தெலுங்கு மூலம் உரையுடன்). | 0 | 1 | 0 |
| ஷை (ஆங்கிலத்தில்). | 0 | 4 | 0 |
| ஸ்ரீ ரமண சரித அகவல் M. சிவப்ரகாசம் பிள்ளை அவர்கள் B. A. இயற்றியது). | 0 | 4 | 0 |
| ஹம்ப்ரீஸ் இயற்றிய ஆங்கில ரமணசரிதச் சுருக்கம் | 0 | 3 | 0 |
| தெலுங்கு ரமண சரிதம். | 0 | 2 | 0 |

---

ஸ்ரீ ரமணீயவாணி புத்தகாலயம் திருவண்ணாமலை.